ஆலைகளும் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சர்க்கரை விலை வீழ்ச்சிதான் இதற்கு முக்கியக் காரணம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தனியார் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குண்டான நிலுவைத் தொகை குறித்து அரசினுடைய முழு கவனத்தில் இருக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வாங்கித் தருவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ், (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், முனைவர் பொன்முடி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். நீங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் இந்த அவையில் மிக மூத்த உறுப்பினர். நீங்கள் அமைச்சராகவும் பணியாற்றியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதாவது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் விவரம் கேட்பதற்கோ, மற்ற கேள்வி கேட்பதற்கோ அனுமதியுண்டு. நீங்கள் அறிவிப்புக் கொடுக்காத நிலையில் நான் அனுமதியளித்தால் அனைத்து உறுப்பினர்களும் வாய்ப்பு கேட்பார்கள். அப்போது நான் அனைவருக்கும் வாய்ப்பளிக்க முடியாது. அமைச்சரும் சேர்த்து பதிலளிக்க முடியுமா? அதனால் தரமுடியாது, உட்காருங்கள்.*

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், அறிவுத்திறன் வகுப்பறை, பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய கட்டடம், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2017 ஜூன் 19]

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். அன்பின் வடிவமே, அறிவுப் பெருங்கடலே, ஆற்றலின் பிறப்பிடமே, ஐந்தெழுத்து அற்புதமே, (மேசையைத் தட்டும் ஒலி) பைந்தமிழ் பொக்கிஷமே, பூமிக்கு வந்த புண்ணியமே, கழகத்தின் காவல் தெய்வமே, ஒப்பிட்டுச் சொல்லமுடியாத உலக அதிசயமே, ஏங்கி நின்ற ஏழைகளைத் தாங்கி நின்ற அன்னையே, திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய் நிற்பவரே தங்களை வணங்கிப் போற்றுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை, எளிய மக்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால் அவர்கள் கல்வி வளர்ச்சி பெற வேண்டும். மாநிலம் முழுவதும் சிறந்த கல்வி அளிக்கப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும். எனவேதான், கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடைகள், விலையில்லா பாடநூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பை, விலையில்லா கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபடப் புத்தகம் ஆகிய கல்வி உபகரணங்கள், ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதிவண்டிகள், கட்டணமில்லா பேருந்துப் பயணச் சலுகை, சத்தான மதிய உணவு போன்ற பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள்.

மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை போன்ற உன்னதத் திட்டங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:

1. வளர்ந்துவரும் தொழில்நுட்ப சவால்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் போதிய கணினி திறன்களை அடையும் வகையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi-tech Labs) ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்படி, *3,090* உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா *10* கணினிகளும், *2,939* மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா *20* கணினிகளும், *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனுடன் தொடர்புடைய இதர சாதனங்களும் வழங்கப்படும். இதற்கென அரசுக்கு ரூ.*437* கோடியே *78* இலட்சம் செலவு ஏற்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்குக் கணினி மூலமாக பாடங்களைப் பயிற்றுவிக்கும் வகையில் முதற்கட்டமாக *3,000* தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் அறிவுத் திறன் வகுப்பறை, அதாவது Smart Classroom ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒவ்வொரு பள்ளிக்கும் *2* இலட்சம் ரூபாய் வீதம் *60* கோடி ரூபாய் இதற்கென அரசால் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. பள்ளிக் கல்வி இயக்ககம் *100* ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இதனால், இதனைப் பராமரிப்பது கடினமாகவும், மிகுந்த செலவினம் கொண்டதாகவும் உள்ளது. அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு இலட்சம் சதுர அடியில் *33* கோடி ரூபாய் செலவில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தக் கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் *(மேசையைத் தட்டும் ஒலி)* "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்" என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2017 ஜுன் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், அறிவியல் உபகரணங்கள், கலை மற்றும் கைவினை அறைகள், கணினி அறைகள், நூலகம், கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 39 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், புதிய கலை மற்றும் அறிவியல் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல், புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைக்கு அளித்துவரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர் கல்விக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்துவந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 6 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 65 புதிய கல்லூரிகளும், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் தேசிய சட்டப் பள்ளி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன. எனவேதான், உயர் கல்வியில் தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 24.5 என இருந்தாலும், தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 44.3 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

உயர் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:

பிற்பகல் 12–10

1. கல்வியின் தரத்தினையும், மாணாக்கர்களின் அறிவுத் திறனையும் உயர்த்தும்பொருட்டு, கடந்த 6 ஆண்டுகளில் அரசு